கள் காரணமாகத்தான் விலைவாசி ஏறுகிறது. இதை மூடி மறைக்க தொழிலாளர்கள் போராடி ஊதிய உயர்வு பெறுவதால விலைவாசி ஏறுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னொன்று. அரசு பதிவில்லாத மூட்டைத் தூக்குவது, காப்பி கடையில் இருப்பது, இன்னும் பீடி, சுருட்டு தயாரிக்கும் தொழிலாளர்கள் எல்லாம் ஏற்கனவே பதிவுபெறாத தொழிலாளர் களோடு முடிவுகாண ஒரு கொள்கையாக கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குப் பிரச்னை. சென்ற கூட்டத்தில் என்னுடைய கட்சித் தோழர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது 25 ரூபாய்க்கும் 10 ரூபாய்க்கும் மதுவிலக்கு பர்மிட் கிடைக்கின்ற சூழ்நிலையில், மதுவிலக்கு தோற்றுவிட்டது; இதைமுழுமையாக நிறைவேற்ற முடியவில்லை, எனவே இதைத் தளர்த்தினால் அரசுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இது இன்றைக்கு மீண்டும் திரும்ப வந்திருப்பது, இந்தக் கோரிக்கையை உறுப்பினர்கள் தலையில் கட்டுகின்ற நிலைதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த கிராம அதிகாரிகள் வேலை நீக்கம் சரியா, தவறா என்பதைவிட, ஏற்கனவே இவர்கள் மணியக்காரர்களாக நியமிக்கப்படும்போது, அவர்களுக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்பதைக் கணக்கிட்டு சமர்ப்பிக்கப்படும். ஆனால், கணக்குப் பிள்ளைகளுக்கு இதைப்போன்ற சூழ்நிலை யெல்லாம் இல்லை (மணியடிக்கப்படுகிறது) என்பதை மட்டும் கூறிக் கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நிறைய பேர்கள் பேசவேண்டி யிருப்பதால், இன்று மாலையிலும் 4–00 மணிக்கு பேரவை கூடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.